III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.34/2014

Deposition of witness for the Defendants/DW5
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 01-08-2023

Name :Krishnakumar Caste :

Father's/Husband's Name: Calling :

Age : Religion :

Village : Taluk:

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் பத்தாவது வரை படித்துள்ளேன். பிராதை படித்து பார்த்து தான் நான் பதிலுரை தாக்கல் செய்தேன். வா.த.சா.1 ஐ நான் படித்து பார்த்தேனா என்றால் 4-5 வருடங்களுக்கு முன்னால் படித்து பார்த்தேன். வா.த.சா.1ல் 20/06/1970ல் சுப்பையா நாயுடுவும் பாபு நாயுடுவும் பங்குதாரர் நிறுவனத்தை முறித்துக் கொண்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். 20/06/1970 முதல் 1978 வரை சுப்பையா நாயுடு தனிப்பட்ட முறையில் அந்த நிறுவனத்தை நடத்திவந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. 1978 வரை பங்குதாரர் நிறுவனம் நடந்து வந்ததாக நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது தவறு என்றால் சரியல்ல. ஆதலால் வா.த.சா.1ல் 20/06/1970 அன்று பங்குதார நிறுவனம் முறிந்துவிட்டதாக சொல்லபட்டிருப்பது தவறு என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.644/1 ல் உள்ள நிலம் சம்மந்தப்பட்ட எனது சகோதரி என் பெயரில் எழுதி வைத்த செட்டில்மென்ட் பத்திரத்தின் பதிவு நிலுவையில் உள்ளது. செங்கரை கிராமத்,தில் சர்வே எண்.455/2ன் மொத்த விஸ்தீரணம் 4 ஏக்கரா 46 சென்ட் என்றால் சரிதான். அதில் 1 ஏக்கர் 19 சென்ட் எனக்கு உரிமையானது. மீதி விஸ்தீரணமான 3 ஏக்கர்

27 செண்டில் எனக்கு உரிமையில்லை. வா.த.சா.6ன் படி 3 ஏக்கர் 27 செண்ட் விற்கப்பட்டுவிட்டது. கோவிந்த சாமி என்னைவிட 10-15 வருடம் மூத்தவர். வா.த.சா.30ன் படி சர்வே எண்.62/1ல் பெருமாள் அகரத்தில் உள்ள சொத்து எனது தகப்பனார் பாபு நாயுடு சுப்பையா நாயுடுவிற்கு விற்றுவிட்டார். மேற்கூறிய நான்கு சொத்துக்கள் குறித்து என்னையும் எனது சகோதரியையும் தரப்பினர்களாக சேர்க்க மனுதாக்கல் செய்திருந்தேன். பிரதிவாதிகள் 4 முதல் 9 வரையிலானோரை ஆதரித்து நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் தவறானவை என்றால் சரியல்ல. தினகரிடம் எனக்கு சமூக உறவு உள்ளதா என்றால் உள்ளது. தினகர் என்மீது அசல் வழக்கு எண்.6/2011 பூந்தமல்லி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அவ்வழக்கு 19/03/2013ல் தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். அதற்கான தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் நகல்கள் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்கள். (அவை முறையே வா.த.சா.54 மற்றும் 55 ஆக குறியீடு செய்யப்படுகிறது). நானும் தினகரும் ஒன்று சேர்ந்து கொண்டு மேற்கூறிய வழக்கை தள்ளுபடியாக்கிவிட்டு, 5,00,000 செங்கல் கற்களை வாதிகளின் ஒப்புதல் இல்லாமல் நானும் தினகரும் எடுத்து விற்று பணமாக்கி கொண்டோம் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள குடை கம்பெனி, பிளாஸ்டிக் ஷீட் உற்பத்தி கம்பெனி மற்றும் ஏனைய கம்பெனிகள் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண்.74/1 பெருமாள் அகரத்தில் உள்ள சொத்து சுப்பையா நாயுடுவிற்கு சொந்தமாகிவிட்டது என்றும் அதில் எனக்கும் எனது சகோதரிக்கும் சொந்தம் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதிகள் 1 முதல் 3, 4 முதல் 6, 7 முதல் 9 மற்றும் 11, 12, ஆகியோா் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை )

(பிரதிவாதிகள் 13 முதல் 16 தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞா்களின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).